

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசிகள், குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கிடல் தொடர்பாக, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (01.03.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 151 நாள்: 01.03.2017

# பத்திரிக்கை செய்தி

தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம், தமிழகம் முழுவதும் பிப்ரவரி 6 முதல் பிப்ரவரி 28 வரை 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் வைத்து போடப்பட்டு வந்தது.

தற்போது அந்த தடுப்பூசி முகாம், அனைத்து குழந்தைகளும் (9 மாதம் முதல் 15 வயது வரை) பயன்பெறும் வகையில், மார்ச் மாதம் 15-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் தடுப்பூசி முகாம், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனை, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் வைத்து நடைபெற்று கொண்டிருக்கிறது.

குமரி மாவட்டத்தில் உள்ள 4,44,603 குழந்தைகள் அனைத்தும் பயன்பெறும் வகையில், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுடன் ஆலோசனைக்கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (01.03.2017) நடைபெற்றது,

நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. மதுசூதனன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திருமதி. பாலா உட்பட சுகாதாரதுறை அலுவலர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.